**ஆகஸ்ட் - 1**

**"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்." - நீதி 18 : 21.**

நாவின் செல்வாக்கு நம்முடைய சரீரத்தின் மற்றெல்லா உறுப்புகளும் சேர்ந்து கொண்டுள்ள செல்வாக்கை மிஞ்சுகிறது. ஆகையால் தங்களுடைய சாவுக்கேதுவான சரீரங்கள் சம்பந்தமாகவும் கர்த்தருக்கு இவைகள் செய்கிற ஊழியம் சம்பந்தமாகவும் கர்த்தருடைய ஊழியத்தில் நாவைக்கட்டுப்படுத்துவது தேவனுடைய ஜனங்களின் மிகவும் முக்கியமான வேலையாயிருக்கிறது. அன்பு, தயை, உதவி மனப்பான்மை இவைகளைக் கொண்ட சில வார்த்தைகள் அடிக்கடி ஒருவருடைய ஜீவியத்தின் முழுப்போக்கையும் எவ்வளவு தூரம் மாற்றியிருக்கின்றன.! ஆம், தேசத்தின் விதியை உருவாக்குவதில் எவ்வளவு பங்கெடுத்திருக்கின்றன! அடிக்கடி எவ்வளவு தீமையான வார்த்தைகளும், தயையற்ற வார்த்தைகளும், அவதூறான வார்த்தைகளும் பெரிய அநீதியை செய்திருக்கின்றன. மற்றவர்களுடைய நல்ல பெயரை சதியாய்க் கொலைசெய்திருக்கின்றன? அல்லது அப்போஸ்தலன் சொல்லுகிற பிரகாரமாக, முதலில் நினையாத விதமாக, தீவிர உணர்ச்சியையும், சண்டைகளையும், விரோதத்தையும் தூண்டிவிட்டு "ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறது." "இரண்டாம் மரணமாகிய" கெஹென்னாவின் அக்கினியால் கொளுத்தப்படுகிறதுமாயிருக்கிறது என்று இப்படிப்பட்ட நாவைப்பற்றி அப்போஸ்தலன் சொல்லுவதில் ஆச்சரியமில்லை.! **- Z '99, 75(R 2442)**

வேதாகமத்தின்படி, நாக்கு அறிவைக் குறிப்பிடுகிறது. பாஷையின் மூலமாக வெளியிட்ட உண்மையான அல்லது பொய்யான அறிவு. ஆகையால், ஜீவன் நாவின் அதிகாரத்திலிருக்கிறது என்ற இந்த மூலவாக்கியத்தின் கருத்து, உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற பரி. யாக்கோபின் புத்தி சொல்லுதலுடன் ஒத்திருக்கிறது. மரணம் நாவின் அதிகாரத்திலிருக்கிறது என்ற இதன்கருத்து, பொய்யான போதகர்களுடைய வார்த்தை அரிபிளவையைப் போலப்படரும் என்று அவர்களைப் பற்றி பரி. பவுல் சொல்லுகிறதற்கு ஒத்திருக்கிறது. நிச்சயமாகவே நாம் நம்முடைய எண்ணங்களையும், பேச்சுக்களையும் காக்க வேண்டும். ஏனென்றால், அவைகள் நமக்கும் கேட்கிறவர்களுக்கும் ஜீவனையும் மரணத்தையும் கொண்டுவருகின்றன. உலகத்தில் இப்பொழுது நிகழுகிற வேதனைகளும் இனிவரப்போகிற சந்தோஷமும் நல்லதும் உண்மையுமான பேச்சோடும் அல்லது தீமையான பொய்யான பேச்சோடும் நெருக்கமாய் சம்பந்தப்பட்டுக் கிடக்கின்றன.
**- P '35, 116.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 12:3; 34:11-13; 140:3; மத் 12:36,37; 15:18,19; யாக் 3:2-13; 1:26; நீதி 10:20,21,31; 11:30; 16:27; 18:4-8; 2தீமோ 2:23-25; ரோம 10:14,15; 2கொரி 2:16; எபே 4:29; கொலோ 4:6.**

**கோபுர வாசிப்பு : Z '14, 245 (R 5517).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என் நாவு என்ன விதமானதோர் வல்லமையாய் செயற்பட்டது? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?**